விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 88 வைகாசி 5 ஷஃபா 27 இதழ் 97
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 18-5-1985

## "இலங்கைப் பிரச்னைத் தீர்வுக்கு —

# இந்திய கடற்படை முற்றுகை அவசியம் தேவை"

### வழக்கறிஞர் கறுப்பன் ரிட்மனு

[சென்னை]

"இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு காணவும், அங்கு இடம் பெறும் அட்டூழியங்களை நிறுத்தவும் இலங்கை மீது இந்தியா கடற்படை ஆக்கிரமிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று சென்னை உயர் நீதி மன்றில் வழக்கறிஞர் ஆர். கறுப்பன் ரிட்மனு வொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இம்மனு மீதான தீர்ப்பை நீதியரசர் ஜனுப் எம். எ. சத்தர் சஹீட் ஒத்திவைத்துள்ளார்.

வழக்கறிஞர் கறுப்பன், இலங்கை மீது படையெடுப்பை மேற்கொள்ளும்படி இந்தியாவை வற்புறுத்தும் வகையிலேயே இம் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அவர் இம்மனுமீது தெரிவித்திருப்பதாவது:- "மத்திய அரசு இலங்கைப் பிரச்னை குறித்து எடுத்த சர்வதேச நடவடிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டன.

(5-ம் பக்கம் பார்க்க)

## ★ கலைஞர் கருணாநிதி கைதானதின் எதிரொலி

# காஞ்சியிலும், திருச்சியிலும் இருவர் தீக்குளித்து மரணம்!

(சென்னை)

**திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர், கலைஞர் மு. கருணாநிதி காஞ்சிபுரத்தில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டதன் எதிரொலியாக – இதனைக் கண்டிக்கும் முகமாக காஞ்சியிலும் திருச்சியிலும் இரண்டு தி. மு. க. ஆதரவாளர்கள் நேற்று தீக்குளித்து மரணத்தைத் தழுவிக்கொண்டனர்!**

இத்தகவலை நேற்று வெளியிட்ட தி. மு. கழக அதிகார பீடம்; இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக மறியல் போராட்டம் நடத்திய கலைஞர் மு. கருணாநிதி கைது செய்யப்பட்டுள்ளதை யடுத்து திருச்சியிலும், காஞ்சியிலும் அவரது ஆதரவாளர்கள் இருவர் தீக்குளித்து மரணத்தைத் தழுவினர் என்றும் தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதி நேற்று முன்தினம் காஞ்சிபுரத்தில் மறியல் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டார். இதனையடுத்தே மேற்படி இரு தீக்குளிப்புச் சம்வங்களும் இடம் பெற்றன" என்று தெரிவித்தது.

இதேவேளை; கடந்த மாதம் இலங்கை தமிழருக்கு ஆதரவாக மறியல் போராட்டம் நடத்தியமைக்காக சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த 1965 பேரில் 1,320 பேர் இப்பொழுது பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

## தஞ்சம்புகுந்தவர்கள்மீதும் சூடு! 6 பேர்பலி! 20பேர்காயம்!

[அநுராதபுரம்]

அநுராதபுரத்தில் நேற்று நடந்த ஒரு சம்பவத்தில் ஆறு தமிழ் அரசாங்க ஊழியர்கள் பலியானார்கள். சுமார் இருபது அரச ஊழியர்கள் படுகாயமடைந்தனர்.

அநுராதபுரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த

(5ம் பக்கம் பார்க்க)

## கரை ஒதுங்கிய சடலங்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் சில தீவுகளின் கரையோரங்களில் பல சடலங்கள் ஒதுங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவுப்படகுப் பிரயாணிகள் கொலைச் சம்பவத்தில் அகப்பட்டோரின் சடலங்களாகவே இவை இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

ஒதுங்கிய சடலங்கள் அடையாளம் காணமுடியாத நிலையில் உருக்குலைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [மா]

## "எங்களைத் தாக்கியவர்களை நயினாதீவில் பார்த்திருக்கிறோம்"

### படகுச் சம்பவ மரணவிசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"எங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களில் இருவரை ஏற்கனவே கண்டிருக்கிறேன். அவர்களை நயினாதீவு இறங்குதுறையில் சீருடையில் கண்டிருக்கிறேன். சீருடையில்லாமலும் அவர்களை நயினாதீவு இறங்குதுறையில் கண்டிருக்கிறேன் இருநபர்களையும் அடையாளம் காட்டுவேன்."

நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவான் சென்ற இயந்திரப் படகில் பலியான 33 பேரின்மரண விசாரணையில் காயமடைந்தவர்களில் ஒருவர் நேற்று சாட்சியமளித்தபோது மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். ஆஸ்பத்திரியில், யாழ் மேலதிக நீதவான் கே.பி எஸ். வரதராசாமுன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

இறந்தவர்களின் நலனை கவனிப்பதற்காக சட்டத்தரணிகளான ஆர். ஈ. தம்பிரத்தினம், ஆர். விஸ்வநாதன், ஆர். ஆர். தங்கராசா, ஆர் பாலசுப்பிரமணியம், ரி. சோமசுந்தரம், வி. சிவநேசன், ந. விஸ்வலிங்கம், க சிவசுப்பிரமணியம், மா. தியாகராசா ஆகியோர் ஆஜரானார்கள்.

காயமடைந்தவர் மேலும் கூறியதாவது:

"இம் மாதம் 15 ம் திகதி காலை நான் நெடுந்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவானுக்குப் புறப்பட்ட படகில் ஏறினேன் படகு காலை 7-40 மணியளவில் நெடுந்தீவிலிருந்து புறப்பட்டது. படகில் 60 முதல் 70 பிரயாணிகள் வரை இருந்தனர். படகிலிருந்த பிரயாணிகள் எனக்குத்தெரிந்தவர்கள்."

### படகை நோக்கி....

"அரை மணி நேரம் பிரயாணம் செய்த பின்னர் நயினாதீவுக்கும், நெடுந்தீவுக்குமிடையில் எங்கள் படகை நோக்கி ஒரு 'பிளாஸ்டிக்படகு' வந்தது. அந்த படகில் 7 அல்லது 8 பேர் இருந்தார்கள். அவர்கள் கைகளில் துப்பாக்கி

(6-ம் பக்கம் பார்க்க)

## ஒருவர் மட்டும் விடுதலை இல்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் கடத்தப்பட்ட வர்த்தகர்களில் திரு எஸ். ஏ. செல்லத்துரை நேற்று மாலை வரை விடுதலை செய்யப்படவில்லை. [க]

## அநுராதபுரம் சம்பவம்: 'டைகேர்ஸ் பயர்' என்றதும் சரமாரியான சூடு!

### நேரில் கண்டவர் தகவல்

(கொழும்பு)

"டைகேர்ஸ் பயர்" என்ற உரத்த கட்டளையை அடுத்தே அநுராதபுரத்தில் பயங்கரவாதிகள் சரமாரியாகச் சுடத் தொடங்கினர்" என்று இச் சூட்டுச் சம்பவத்தை நேரில் கண்ட நபரொருவர் தெரிவித்தார்.

அநுராதபுரம் பழைய பஸ் நிலையத்தில் கடை வைத்திருக்கும் இவரைப் பத்திரிகையாளர்கள் பேட்டி கண்ட போதே அவர்மேற்கண்டவராறு தெரிவித்தார்.

அந்நபர் தொடர்ந்து கூறியதாவது;- "அநுராதபுரம் பழைய பஸ்தரிப்பு நிலையத்திலேயே இச்சூட்டுச் சம்பவம்

(6-ம் பக்கம் பார்க்க)

## 'வில்பத்து'வில் தேடுதல் தொடருகிறது!

(கொழும்பு)

அநுராதபுரம் படுகொலைச் சம்பவங்களில் ஈடுபட்ட பயங்கரவாதக் குழுவைத் தேடும் பணி தொடர்ந்து தீவிரமாக இடம்பெறுகின்றது.

முப்படையினரும் அநுராதபுரம் பகுதியிலுள்ள வில்பத்து வனவிலங்குப் பூங்காவில் தேடுதல்களை நடத்திவருகின்றனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## எண்மர் கடத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இ. போ. ச. பஸ்ஸில் பிரயாணம் செய்த எட்டுப்பேர் நேற்றுக் கடத்தப்பட்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் ஓட்டமாவடியில் நடந்தது.

## அமைச்சர் ராஜினமா வதந்தி!

(கொழும்பு)

இரண்டு அமைச்சர்கள் ராஜினமா பற்றி, நேற்று பரவலாக வதந்தி நிலவியது!

சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் 'ஈழநாடு' நேற்றிரவு தொடர்பு கொண்ட போது —

"இன்றுவரை இல்லை நாளை நடப்பதை யாரறிவார்..." என்று இருவரும் சிரித்துக் கொண்டே பதிலளித்தனர்

## நவீனம் பாரீர்!

(யாழ்ப்பாணம்)

நவீன ரகத்தைச் சேர்ந்த 'வான ஊர்தி' ஒன்று, வட பகுதியில் நடமாடத் தொடங்கியுள்ளது!

வானத்திலும், கடலிலும், தரையிலும், சாதாரண பாதையிலும் இந்த 'வான ஊர்தி' நடமாடும் என்று விஷயம் தெரிந்த ஒருவர் தெரிவிக்கிறார். [மா]

## திருமலைச் சம்பவம்

[திருகோணமலை]

நிலாவெளியிலுள்ள ஒரு கடற்கரைக் 'ஹோட்டலில்' நேற்றுமுன்தினம் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதுடன், வாகனம் ஒன்றும் கடத்தப்பட்டது.

திருகோணமலையில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து இரவு ஏழுமணி முதல் அதிகாலை 4 மணிவரை தொடர்ந்து அமுலில் உள்ளது.

நேற்று எந்தவிதமான அசம்பாவித சம்பவமும் நடைபெறவில்லை

## சடலங்கள் ஒப்படைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில்வைக்கப்பட்டிருந்தசகலசடலங்களும் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம்

(5-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தாளையடியில் ரோட்டுக்கரு காமையில் செட்டியார் வீடும் வளவும் 4 பரப்பு உடன் விற்பனைக்கு. திருமதி S. மத்தியூஸ், 16, கொன்வென்ற் ரோட், யாழ்ப்பாணம். 3244

அப்பளம், தோசை, தயாரிப்பதற்கேற்ற உழுந்து மா (OridFlour) கிலோ ரூபா 20/-க்கு பெற்றுக் கொள்ளலாம் M G M Stores 777, காங்கேசன்துறை வீதி, and 208, முதலாம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611 (2820

அரியாலை, கண்டி வீதி, மெயின் ரோட்டில் ஒரு வீடும், தனியாக 1½பரப்புக் காணியும் அத்துடன் நல்ல இன பொமிரேனியன் நாய்க்குட்டிகளும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு தொடர்பு, ராதா, இல: 21, வேம்படி ரோட், யாழ்ப்பாணம். 3311

புதிய N. V. 370 நஷனல் டெக்சும், 20'' சொனி T. V. கலர் விற்பனைக்குண்டு. 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தியடி, யாழ்ப்பாணம். 3313

2 ஸ்ரீ 1000 Morris Minorகார் நல்லநிலையில் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு நாட்களில் பார்வையிடலாம். தொடர்பு தம்பு காசிநாதன், 3ம் கட்டையடி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 3312

வட்டுக்கோட்டை ஞான சம்பந்தர் வீதியில் நல்ல தண்ணீர் உள்ள 2 நிலப்பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ. சிவபாலன், சட்டத்தரணி, சித்தன்கேணி. 3315

யாழ். விவசாயிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட 'பூனா சிவப்பு' ரக பம்பாய் வெண்காயவிதை சிறீமகள்றேடேர்ஸ் 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் விநியோகம் செய்யப்படுகின்றது. சிறுதொகை மட்டுமே கிடைக்கப்பெற்றதால் விவசாயிகள் உடன் தொடர்பு கொண்டு தேவைக்கேற்ப கொள்வனவு செய்யவும் இதன் விலை கிலோ ரூபா 260/-ஆகும். 3314

## மணப்பந்தல்

மத்திய கிழக்கு நாட்டில் தொழில் புரியும் செவ்வாய் தோஷமற்ற கத்தோலிக்க உயர் வேளாளகுலத்தவரும் மது, புகைத்தல் பழக்கமில்லாத, 30 வயதுடைய மணமகனுக்கு அழகும், கல்வியறிவுமுள்ள மணமகள் தேவை 10 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும். விபரங்களுக்கு விளம்பர இல. 3263 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3263

## வகுப்புகள்

தமிழ்/ஆங்கிலசுருக்கெழுத்து, தட்டெழுத்து, ஆங்கிலம், கணக்கியல் ஆகிய வகுப்புகள் எல்லாப் பரீட்சைகளுக்கும் நடைபெறுகின்றன. தனிப்பட்ட கவனிப்பு. லண்டன், பிற்மன் நிறுவனத்தால் தங்களின் பரீட்சைகள் நடைபெறும். நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசினால் தொழிற்கல்வி நிலையமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. S. T. C. A., மகளிர்தொழிற் கல்வி நிலையம், 37 (149,சிவன் பண்ணை வீதி, [யாழ். வைத்தீஸ்வரா கல்லூரிக்கு அண்மையில்], யாழ்ப்பாணம். 3304




## விற்பனைக்கு

மிகப் பக்குவமாகப் பாவிக்கப்பட்ட 9 Sri Volswagen கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: 15, சீனிவாசகம்வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 3267

### பனை அபிவிருத்திச் சபை

## இலச்சினைச் சித்திரம்

நம்நாட்டின் பாரம்பரிய மூலவளமான பனையின் மகத்துவம் அதன் அபிவிருத்தி, இன்றைய சூழலில் அதன் பொருளாதார முக்கியத்துவம் என்பவற்றை வெளிப்படுத்தக் கூடியதாக பனை அபிவிருத்திச்சபைக்கென ஒரு இலச்சினை (Symbol)யை உருவாக்குவதற்காக சித்திரங்கள் கோரப்படுகின்றன. சித்திரங்கள் இந்தியன் மையினால் வரையப்பட்டிருக்க வேண்டும்: தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த சித்திரத்துக்கு மட்டும் சன்மானம் வழங்கப்படும். சித்திரங்கள் யாவும் 10-6-85ம் திகதிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்க வேண்டும்.

**தலைவர்,**
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்
யாழ்ப்பாணம்.
330

சி. துரைராசா,
சட்டத்தரணி
பிரசித்த நொத்தாரிஸ்,
6/1 சந்தானமாதா கோவில் வீதி, சுண்டிக்குளி.

### பின்னுறுதிக் கட்டளை

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், புங்கன் குளம் ரோட்டு 34ம் இலக்கத்தில் வசித்த சுப்பிரமணியம் சிவகுருநாதனின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு நிருவாகத் தத்துவப் பத்திரம் விடயத்தில்
— காலஞ்சென்றவர்

சுப்பிரமணியம் சிவகுருநாதன் கைம்பெண் விரதசாராணி
34, புங்கன்குளம் ரோட்டு,
யாழ்ப்பாணம்.
— மனுதார்

வழ. இல. தத்துவம் / 3878

எதிராக

1. சுப்பிரமணியம் சிவகுருநாதன் மகள் மஞ்சுளா,
2. சுப்பிரமணியம் சிவகுருநாதன் மகள் சித்திரா.
3. சிவகுருநாதன் சியாம்ஸரம் [பராயமற்றவர்]
4. சுப்பிரமணியம் சிவகுருநாதன் மகள் சிருணி. (பராயமற்றவர்)
   34, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.
5. தம்பிராசா குலசிங்கம், 23, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

— எதிர்வாதிகள்

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனம் இல்லாத மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும்1985-ம்ஆண்டு ஆனிமாதம் 21-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப் படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1985-ம் ஆண்டு பங்குனி மாதம் 7-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்,
பதிவாளர்

வரைந்தது:
சி. துரைராசா
மனுதாரின் சட்டத்தரணி
3285

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய

## அறிவித்தல்

(இல 84அ- பிரிவுகள் 524,532)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கோப்பாய் தெற்கு,கோப்பாய் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை சண்முகநாதன் பெண் சிவமணி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்
— மரணமெய்தியவர்

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய், சதாசிவம் செல்வரத்தினம்.
— மனுதார்.

மரண சாதன நியாயாதிக்கம் } இல. T / 3767

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985-ம் ஆண்டு வைகாசி மாதம் 31ந்ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
மு. அ. மக்பூல்,
பதில் பதிவாளர்

என்னால் வரையப்பட்டது.
ஒப்பம்
க. கேசவன்,
மனுதாரின் சட்டத்தரணி.

1985-ஆம் ஆண்டு 3ம் மாதம் 27-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
3294

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய

## அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்

இளவாலை என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நடராசா கைம்பெண் வள்ளிப்பிள்ளை என்பவரின் மரண சாதன மற்ற மரணச்சொத்துக்களின் விடயத்தில்
-மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் இல : ரி/215

நடராசா அருந்தவராசா
''ராணி மகால்''
இளவாலை வடக்கு,
இளவாலை.
- மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985 ம் ஆண்டு தை மாதம் 23ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்

1985 ம் ஆண்டு தை மாதம் 18 ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார்சிவபாதசுந்தரம்,
பதிவாளர்

தயாரித்தவர்:
சிவ. சிறிதரன்,
மனுதாரின் சட்டத்தரணி.

காரணம் காட்டும் திகதி 17-7-85 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
3300 பதிவாளர்.

## உயர் விருத்திக் கல்வி நிலையம்

தலங்காவல் பிள்ளையார் கோவிலடி,
றிஜிஸ்ரார் லேன், திருநெல்வேலி கிழக்கு.

ஆரம்பக்கல்வி தொடக்கம் பத்தாம் வகுப்பு வரை எல்லாப் பாடங்களும் பட்டதாரி வகுப்பு வரை ஆங்கிலமும் தகுதி பெற்றவர்களால் போதிக்கப்படுகின்றன.

தொடர்புகள்:
(3295) த. அன்னலிங்கம்.

## HOME FINANCE LTD

## ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்

பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக

**சீத்தை – பப்ளின் – பீசாமா**

போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு. சகாய விலை. விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவு செய்யவும்.

NO: 82, KANNATHIDDY ROAD, JAFFNA

## தேவை

கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள
புளோவர்ஸ் (BLOWERS) ஹெல்ப்பர்ஸ் (HELPERS) பபிளேர்ஸ் (BUBBLERS) தேவை

இலவச தங்கு வசதிகளும் குறைந்த செலவில் மூன்று நேரச் சாப்பாடும் வழங்கப்படும்.
வேலைக்குரிய ஊதியமும் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்ய வசதிகளும் வழங்கப்படும். நேரில் வரவும்.

**மகேந்திரா கண்ணாடி தொழிற்சாலை,**
இலக்கம் 9, கண்டி வீதி, நாவற்குளி.
(3310)

இலங்கை இந்திய மக்களின் ஆவலைப் பூர்த்தி செய்யுமுகமாக, சென்னை மாநகரத்தில் மவுண்ட் ரோட், ஜெமினி சதுக்கம் (அண்ணா மேம்பாலம் அருகில்) அமைந்த

## ''யாழ்ப்பாண இல்லம்''

அசைவ உணவகத்தைத் திறந்து முற்றிலும் இலங்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை பரிமாற இருப்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்,

உரிமையாளர்

**யாழ்ப்பாண இல்லம்,**
பார்சன்கொமோசல் கொம்பிளெக்ஸ்
ஜெமினி சதுக்கம்,
121,மவுண்ட் ரோட்,
சென்னை 6.
3239

## ஓராண்டு நினைவஞ்சலி

### டாக்டர் திருமதி அமிர்தகௌரி பகீரதன்



தோற்றம்: 20-6-1950
மறைவு: 18 5-1984
திதி: 6-6-1985

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த நீங்கள், எங்களை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்டு இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகி விட்டது. நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் தங்கள் நினைவு எமது உள்ளத்தில் எப்பொழுதும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது தங்களது ஆத்மா சாந்தி அடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தங்கள் பிரிவால் துன்புறும்

கணவன், மகன் பெற்றோர், மாமி, உறவினர்கள், நண்பர்கள்.

20/6, வைரவர் கோவில் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (3291)

# இலங்கை இனப்பிரச்னை: விரைவில் அரசியல் தீர்வு ஏற்படுமென ரஜீவ் நம்பிக்கை

## புதுடில்லியில் இலங்கை விசேஷத் தூதருடன் இந்திய பிரதமர் ஆலோசனை

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அந்நாட்டு அரசு விரைவில் அரசியல் தீர்வொன்றைக் காணுமென்ற இந்தியாவின் நம்பிக்கையை பிரதமர் திரு. ரஜீவ் காந்தி இலங்கை வெளிவிவகார ஆலோசகரும், ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் சிறப்புத் தூதுவருமான திரு. எஸ்மன்ட்விக்கிரமசிங்காவிடம் எடுத்துக் கூறினார்.

திரு. எஸ்மன்ட் விக்கிரமசிங்கா நேற்றுமுன்தினம் இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தியை புதுடில்லியில் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையின்போதே பிரதமர் ரஜீவால் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### அரைமணி நேரம் ஆலோசனை

சுமார் அரைமணி நேரம் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் உதவியாளர்கள் எவரும் பங்குகொள்ளவில்லை என்றும், சந்திப்பின்போது இலங்கை இனப்பிரச்னையின் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தெற்காசிய ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு திம்புவிலிருந்து தாயகம் திரும்பும் வழியில் திரு. விக்கிரமசிங்கா டில்லியில் தங்கியது குறித்து இந்திய அரசு மகிழ்ச்சியடைவதாக வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ரா)

## தமிழகத்தில் ஒரு லட்சம் இலங்கை அகதிகள்

[சென்னை]

இதுவரை ஒரு லட்சம் இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் வந்துள்ளதாகவும் அவர்களில் இருபது ஆயிரம் பேர் எவ்வித ஆதரவும், வசதியுமற்றவர்கள் என்றும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு டீ வி அந்தோனி நிருபர்கள் மத்தியில் தெரிவித்தார்

இந்த அகதிகளுக்கு தங்குமிட வசதி செய்துகொடுப்பதற்கென மத்திய அரசிடமிருந்து 5 கோடி ரூபா கேட்டுள்ளதாகவும், இவர்களுக்கு தூத்துக்குடி, மண்டபம் ஆகிய பகுதிகளில் இந்த வசிப்பிடங்கள் அமைத்துக்கொடுப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைவிடுமுறைமுடிந்து மீண்டும் அவைகள் திறக்கப்படுவதற்கு முன்பதாக இவ்வகதிகளுக்கான தங்குமிட வசதி செய்துமுடிக்கப்பட்டுவிடுமென்றும்; இந்த அகதிகளில் பலர் ஆசிரியர்களாக உள்ளதாகவும், அவர்களைக் கொண்டே அகதி பிள்ளைகளுக்கு கல்வி கற்கும் திட்டத்தை அரசு பரிசீலித்துவருவதாகவும் திரு அந்தோனி தெரிவித்துள்ளார். (ரா)

## முதல்வர் எம். ஜி. ஆர். கோரிக்கையின் மீது: இந்திய உயர்மட்ட குழு இலங்கைஅகதிகளைசந்திக்கும்

[சென்னை]

மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் தலைமையில் இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்காக அமைக்கப்பட்ட மத்திய உயர் குழு இராமேஸ்வரத்தில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமிற்கு நேரடியாகத் தகவல்களைக் கேட்டறிய வரவுள்ளது.

இக்குழு வருகின்ற திகதியை நான்கு அல்லது ஐந்து தினங்களில் அறிவிப்பதாக திரு. சவான் தமிழக அரசுக்குச் செய்தி அனுப்பியுள்ளதாக தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. டீ. வீ அந்தோனி நிருபர்கள் மத்தியில் சென்னையில் தெரிவித்தார்.

புதுடில்லியில் பிரதமர் ரஜீவ் காந்தியை தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சந்தித்தபொழுது இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் திர்வுகாண பிரதமர் ரஜீவ் காந்தி அமைத்துள்ள உயர்மட்ட ஆலோசனைக் குழு விரைவில் இராமேஸ்வரம வந்து அங்குள்ள முகாம்களில் இருக்கும் இலங்கைத் தமிழர்களை நேரடியாக சந்திக்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருந்தார் என்று திரு. அந்தோனி தெரிவித்தார்.

இராமேஸ்வரத்திலுள்ள அகதிகளை நேரில் சந்தித்தால்தான் உண்மை நிலையை அறியமுடியுமென்றும் அதன்மூலம் இலங்கை தமிழர் பிரச்னைக்கு எவ்வாறு தீர்வுகாணலாம் என்பதைப் புரிந்துகொள்ளமுடியுமென்றும் முதல்வர் அப்பொழுது தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழக நிதி அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் சவானை நேரில் சந்தித்து இதே கோரிக்கையை விடுத்ததாகவும் திரு. அந்தோனி நிருபர்கள் மத்தியில் தெரிவித்தார். [ரா]

## பங்களாதேஷில் நடக்கும் உள்ளூராட்சி தேர்தல்

(டாக்கா)

பங்களாதேஷில் 251 உள்ளூராட்சி தலைவர்களை தேர்ந்தெடுப்பதற்கான முதல்கட்ட வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது இதில் 1200க்கு அதிகமான வே..பாளர்கள் போட்டியிட்டனர்.

2வது கட்டமாக எஞ்சிய 207 ஊர்களுக்கும் வாக்கெடுப்புஇம் மாதம் 20ந் திகதி நடைபெறுமென்றும் தெரிவிக்கப்பட்டுளளது

1982 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த இராணுவ அரசு துவக்கிய தற்போதைய அமைப்பின் கீழ் முதல் தடவையாக இத் தேர்தல் நடைபெறுகின்றது என்றும் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பின் காரணமாக சென்ற ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவிருந்த இந்தத் தேர்தல் ஒத்திப்போடநேர்ந்ததென்றும் தெரிவிக்கப்பட்டது [ரா]

## இந்திய ராஜ்யசபையில் கோரிக்கை "அணிசேரா இயக்கத்திலிருந்து இலங்கையை நீக்கவேண்டும்"

(சென்னை)

இலங்கையில் ஏதுமறியாத அப்பாவித் தமிழர்கள் தொடர்ந்தும் மனிதாபிமானமற்ற முறையில் கொல்லப்பட்டு வருவதினால் அந்நாட்டை அணிசேரா இயக்கத்திலிருந்து நீக்கவேண்டுமென்று அனைத்திந்திய அ. தி. மு. க. உறுப்பினர் திரு. ஆர். இராமகிருஷ்ணன் ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

அப்பாவித்தமிழர்கள் கொல்லப்படுவதை தடுக்க அணிசேரா இயக்கத்தின் தலைவர் என்றவகையில் இந்தியா தீவிர நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் கூறியதாக தெரிவிக்கப்பட்டது. (ரா)

## இவர்களும் பலியாகினர்

(யாழ்ப்பாணம்)

வ. பி. போக்கு வரத்துச் சபை ஊழியர்களான ந கந்தையா (48 வயது) [சாரதி] என்பவரும், ச. கோவிந்தன் [46 வயது] (நடத்துனர் என்பவரும் நெடுந்தீவுக் கடலில் மரணமானவர்களாவர்.

நெடுந்தீவைச் சேர்ந்த இருவரும் 15 நாள் கடமைபுரிந்துவிட்டு கோண்டாவில் டிப்போவுக்கு கடமை மாற்றம் சம்பந்தமாகப் படகில் வந்துகொண்டிருக்கையில் பலியானார்கள். (மா]

## இந்திய பிரதமர்மீதான கொலைமுயற்சி சிக்கிய தீவிரவாதிகள் லண்டனில் விசாரணை

(லண்டன்]

இந்திய பிரதமர் திரு ரஜீவ் காந்தி அமெரிக்கா செல்லும் பொழுது அவரை கொலைசெய்வதற்கு நடந்த சதி தொடர்பாக லண்டனில் பல தீவிரவாதிகளை பொலிசார் விசாரித்து வருகின்றனர்.

இந்த சதியில் சம்பந்தப்பட்ட இரண்டு தீவிரவாதிகளை அமெரிக்காவின் விசாரணைக் கழகம் தேடிவருகின்றது என்றும்; இவர்களை கண்டுப்பிடிக்கபிரிட்டன், பிரான்ஸ் மற்றும் கனடாவிலுள்ள திட்ட அமுலாக்க ஏஜன்சிகளை அது உஷார் படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## முஸ்லிம்-கிறிஸ்தவ படைகளுக்கிடையில் தொடர்ந்து சண்டை

(பெய்ரூட்)

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் முஸ்லீம் - கிறிஸ்தவ மக்கள் படையினரிடையே தொடர்ந்து 19 நாட்களாக சண்டை நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் இரவும், நேற்றுக் காலையும் நடந்த சண்டையில் ஐந்து பேர் இறந்துள்ளதாகவும் 19 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சண்டையை நிறுத்த சிரிய துருப்புக்கள் பெய்ரூட்டுக்கு அனுப்பப்படவுள்ள அதேவேளை தொடர்ந்து மூன்று வாரங்களாக நடைபெற்று வரும் இந்த சண்டையை முடிவுக்கு கொண்டு வர அதிபர் ஜமாயல் டமாஸ்கஸ்ஸில் சிரிய அதிபர் ஜனுப் அஸாயிடம் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரா)

## மரத்திலிருந்து விழுந்து மரணம்

(வேலணை)

கள்ளுச்சீவுவதற்காக பனை மரத்தில் ஏறியவர் அப் பனை மரத்திலிருந்து தவறிவிழுந்து பரிதாபமான முறையில் மரணமானார்.

இப்பரிதாப சம்பவமொன்று நயினாதீவு தெற்கில் இடம்பெற்றது.

கதிரன்ஆறுமுகம் (வயது 64) என்பவரே இவ்வாறு மரணத்தைத் தழுவிக் கொண்டவரார்.

## படகில் நடந்த பாதகம்: ஒரே குடும்பத்தில் மூவர் பலி!

(யாழ்ப்பாணம்)

பிரயாணிகள் படகில் இடம்பெற்ற கொலைச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த (தாயும் இரு பிள்ளைகளும்) மூவர் பலியாகி ஒருமகன் படுகாயம் அடைந்துள்ளார்.

பலாலியைச் சேர்ந்த மரியம்மா பத்திநாதர் (49வயது), நிமிலி பத்திநாதர் (15வயது), ப. யோகராசா (14 வயது) ஆகியோர் மரணமானவர்கள். அருள் பிரேமிளா பத்திநாதர் (17 வயது) படுகாயமடைந்துள்ளார்.

நெடுந்தீவில் ஒரு மருமகனின் வீட்டிற்குச் சென்றுவிட்டு படகில் குறிகாட்டுவானுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் பொழுதே இவர்களுக்கு இக்கதி நேர்ந்ததாம்.

இச்சம்பவத்தில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த இரு சகோதரிகள் கொலைசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு பெண்ணின் கணவர் படுகாயமடைந்துள்ளார்

குசலகுமாரி சாந்தலிங்கம் (27 வயது), அனுசூயா அரியநாயகம் (22 வயது) ஆகியவர்

(5ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

எங்கே பெரும்பான்மையர் திரண்டு ஒரு முடிவெடுக்கின்றனரோ அம்முடிவு முட்டாள்கள் முடிவென்று கொள்ளலாம்.

— ஓர் அறிஞர்

# நமது நோக்கு

## குண்டர்களை உடனே வெளியேற்றுக!

அரசியல்பிழைத்தோர்க்கு அறம் கூற்றென்ற உண்மையில் நாம் இன்றும் நம்பிக்கை இழக்கவில்லை.

விலங்குத் தன்மை யாழ்ப்பாணத்தில் நடமாடும்காட்சியைக் கண்டுகளிக்க ஆட்சியாளர் எவரும் வராரென்பது திண்ணம். அநியாயமாக உயிரிழந்த ஒவ்வொருவருக்கும் பிராயசித்தம் நிச்சயம் என்பதை ஆட்சி நினைவில் கொள்ளட்டும்.

இன்று யாழ்ப்பாணம் மட்டுமல்ல தமிழ் மாவட்டங்கள் கிழக்கிலும், வடக்கிலும்- குறிப்பாக வவனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் ஒருபெரும் மயானமாகக் காட்சியளிக்கின்றன. தலைப்பட்டினத்தின் பெரிய ஆஸ்பத்திரிகள் மாபெரும் மரண வீடுகள்.

இப் பகுதி இது காறும் காணாத கண்ராவி உலகெங்கிலும் காண முடியுமா வென்ற சந்தேகத்தைஎழுப்புகிறது.

லெபனானில் நடந்த கொடுமைகளுடன் ஒப்பிடும்போதும் இங்கு நடைபெறும் கோரக் கொலைகள் சர்வதேச மனச்சான்று சகிக்க முடியாத சம்பவங்கள்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற தாக்குதல் இன்றும் மர்மமாகவே இருக்கின்றது எடுத்த எடுப்பில் "தமிழ்ப் பயங்கரவாதிகள்" செய்த கொலை யென்று அகில உலகுக்கும் அறிவித்த அரசு, அதனை நிரூபிக்க முடியாத நிலையும் தமிழ்ப் போராளிகள் எவரும் உரிமை கோராததும், திட்டமிட்டதுபோல அதனைத் தொடர்ந்து தமிழ் மாவட்டங்கள் - வவனியா, யாழ்ப்பாணப் பகுதிகளில் நடைபெறும் கொலைகளும்- இத்தர்மத்துக்குத் தூபமிடுகின்றன.

தமிழ் இளைஞர் தாக்குதல்களில், தோல்வியடைந்த ராணுவம் பொதுமக்களை அழித்து ஒழித்துவருவது கண்கூடு. ஆனால் இன்று யாழ்ப்பாணத்தில் ஒரு புதிய இறக்குமதி நாடெங்கும் அழிவைப் பரப்புகிறது. கடலில் கத்திகள், கோடரிகள் போன்ற பயங்கர ஆயுதங்கள் தரித்த 'வீரர்கள்' நிச்சயம்ராணுவ வீரர்கள் அல்ல.

தென்பகுதியிலிருந்து குண்டர் கோஷ்டி இங்கு வந்திருப்பதாகவும், மாவட்டம் முற்றிலும் அச்சம் பரவக்கூடிய அழிவுத் தொழில் நடைபெறுவதாகவும் நம்பக்கூடிய செய்திகள் வந்து குவிகின்றன.

எமக்கு இந்த இக்கட்டில் உதவக்கூடியவர் யார்?

ஒற்றை ஆட்சியில் உறுதி கொண்ட ஜனாதிபதி ஜயவர்த்தனவும் அவருடைய சகாக்களும் அந்த யூனிற்றறி (Unitary) ஆட்சிமுறைக்கு யூறினறி (Urinary) நோய் ஏற்பட்டிருப்பதையும், இந்த நெருக்கடியான நிலையில் தக்க வைத்தியம் கிட்டாவிட்டால் நீனல் நிறுத்தம் (Renal failure) எந்நேரமும் நிகழலாம் என்பதை எச்சரிக்கையாக அறிந்திருக்க வேண்டும்.

தமிழ்ப்போராளிகள் உயிரைத் துச்சமென மதியாது தம் தாயகத்தை மீட்கவேண்டுமென்று போராடுகிறார்கள்.

போரில் எங்கள் இனத்தின் முதல் வடியானஇளஞ் சந்ததியினரை இழப்பதற்கு நாம் எவ்வாறு ஒருப்படுவோம். போரை நிறுத்துங்கள்! தமிழினம் ஒரு குரலில் அரசுக்கும் சவால் விடுவோம். "எம்மில் ஒருவரேனும் இன்றைய கொடிய ஆட்சிக்கு ஒத்துழைப்பு நல்கமாட்டோம். எங்கள் அலுவல்களை நாம் நிர்ணயிக்கும் அதிகாரம் எம்முடையது. துப்பாக்கி உங்களுடைய தொழில். ஒத்துழையாமை எங்கள் உரிமை."

இந்தக்கருத்தை ஒரு குரலில் எழுப்ப இன்றைய தமிழ்ப்போராளிகள் இசைவார்களா? அரசின் ஏமாற்ற நாடகம் அவர்கள் நன்கறிந்ததே. இருப்பினும் இன்றைய பேரழிவுக்கு இடமளிப்பது மனிதாபிமானமாகாது.

தமிழர் வருங்காலம் இன்றைய இளைஞர் வருங்காலம். அந்த வரலாற்றில் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருப்பதுபோல அவருக்கு ஒரு பிரத்தியேகமான இடமிருக்கும்; எங்கள் இனத்தைக்காத்த இரட்சகர் என்ற இடமில்லாவிட்டாலும், எங்கள் இளைஞர்கள் தமிழ் மக்கள் விடுதலை வீரர்களாகத் திகழ அமைச்சரின் சாதனை பெரிதென்பது வெளியாகும்

இன்று மிக மிக அவசரமானது இந்தப்பிரதேசத்திலிருந்து வெளியூர் குண்டர்களை வெளியேற்றுவதே. குண்டர்கள் ஏதோ ஒரு குறிப்பிட்ட இனத்துக்குரியவர் அல்ல. எங்களுக்குள் இவ்வித 'தீரச்'செயல்கள் செய்பவர் பலர் உளர்.

ஆனால் குழந்தைகள் உயிரைக்குடிக்கும் இராட்சத பிறவிகள் எமது மரபில் என்றும் காணப்படாத புதுமை.

இந்த மிருகவர்க்கத்தை உடனடியாக வெளியேற்றும்படி ஜனாதிபதிஅவர்களை மிக விநயத்துடன் வேண்டுகின்றோம்.

---

மாங்குளத்தில்——

## பஸ் பயணிகளுக்கு பயங்கர அனுபவம்!

(யாழ்ப்பாணம்)

கடந்த புதன்கிழமை மாங்குளம் பகுதியில் பஸ் பிரயாணிகள் சிலருக்கு பயங்கர அனுபவமொன்று ஏற்பட்டது. உயிர் பிழைப்போமோ என்ற கேள்விக்குறியுடன் தாம் தப்பி வந்ததாக அப்பயணிகள் தெரிவித்தனர்.

வவனியாவிலிருந்து பகல் 12-30 மணியளவில் இரு பஸ்கள் யாழ்ப்பாணம் வந்தன.

இவை மீண்டும் மாங்குளத்தில் சீருடை அணிந்தவர்களால் நிறுத்தப்பட்டு, முகாமுக்குள் கொண்டு செல்லப்பட்டனவாம்.

இதனைத் தொடர்ந்தே அவற்றில் வந்த பயணிகள் பயமுறுத்தல்களுக்குள்ளானார்கள் என்று அப்பயணிகளில் ஒருவர் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: "முகாமுக்குள் இரு பஸ்வண்டிகளையும் ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்தச் செய்தனர். பின்னர் உள்ளிருந்தவர்களை கீழேஇறங்கச் செய்து பயமுறுத்தும் தோரணையில் அங்கு நின்றவர்கள் பேச்சை ஆரம்பித்தனர்.

"நாம் செய்வது யாவும் சரியானது. உங்கள் ஆட்களே படுமோசமானவர்கள்" என்று பயணிகளிடம் கூறப்பட்டதாம்.

இதன்பின்னர் 'உங்கள் எல்லோரையும் தற்போது சுடப்போகிறோம். என்ன கூற விரும்புகிறீர்கள்?' என்று கேட்கப்பட்டதாம்.

அப்போது பயணிகள் ஒவ்வொருவரும் செய்வதறியாது திகைத்து நின்றபோது வயோதிபப் பெண்ணொருவர் "ஐயா நாங்கள் இருபக்கமும் அடிபட்டுக் கொண்டிருக்கிறோம்" என்று கூறினாராம்.

இதனையடுத்து அச்சீருடையினரின் அதிகாரியொருவர் தாம் அப்படிச் சுடப்போவதில்லையென்றும், யாழ்ப்பாணம் சென்றதும் உங்கள் ஆட்களுக்கு அவர்கள் நடவடிக்கை பற்றி எச்சரிக்கை செய்யுங்கள் என்றும் கூறினாராம்.

இத்திகில் அனுபவம் சுமார் மூன்றுமணி நேரம்வரை தமக்கு ஏற்பட்டதாகவும், தொடர்ந்து பயணத்தை மீண்டும் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

---

## பத்துநாள் அனுபவத்தை கூறுகிறார் வர்த்தகர் முருகேசு

(யாழ்ப்பாணம்)

பத்து நாட்களும் விரும்பிய சாப்பாடு தந்து தன்னை நன்கு பராமரித்தார்கள் என்று நேற்றுமுன்தினம் விடுதலை செய்யபபட்ட யாழ். வர்த்தக சங்கத் தலைவர் திரு. எஸ். வி. முருகேசு தெரிவித்தார்.

ஒரு சிறிய வீட்டில் தான் வைக்கப்பட்டிருந்ததாகவும், அங்கு எல்லா வசதிகளும் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

விசாரணை செய்துவிட்டு உடன் விடுவதாகத் தெரிவித்தபடியால் கடத்தப்பட்ட இரவு அணிந்திருந்த சாரத்துடனும், துவாயுடனுமே தான் சென்றதாகவும் மாற்று உடைகளைத்தான் ஏற்கவில்லையென்றும் குளிப்பதற்கு துலாகிணறு இருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பத்து நாட்களும் படிப்பதற்கு பத்திரிகை எதுவும் தரப்படவில்லையென்றும் வெத்திலை, சிகரட் தினமும் தனக்கு வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நல்லூர் செட்டித்தெருவிலுள்ள அவரது இல்லத்திற்கு நேற்று முஸ்லிம் வர்த்தகர்கள் உட்படப் பெருந்தொகையான வர்த்தகர்கள், கடை ஊழியர் சிப்பந்திகள் சென்று உரையாடினார்கள்.

இவரது 3 பிள்ளைகளும் 7 ஊழியர்களும் இருதினங்களுக்குமுன்னர் சாகும்வரை ஆரம்பித்த உண்ணாவிரதத்தை இவர் விடுதலைசெய்யப்பட்டதை அறிந்து நேற்றுமுன்தினமிரவு 9 மணிக்கு முடித்துக் கொண்டனர்.

தனது விடுதலைக்காகப் பாடுபட்ட தமிழ் முஸ்லிம் வர்த்தகர்களுக்கும் கடையடைப்பு, ஹர்த்தால் நடத்திய வர்த்தகர்களுக்கும் உண்ணாவிரதத்திற்கு ஆதரவு வழங்கியவர்களுக்கும் திரு எஸ். வி. முருகேசு நன்றி தெரிவித்தார்.

எவ்வித நிபந்தனையுமின்றி தான் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (கா)

---

## ஆசிரியப் பெருந்தகை



"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு"

இரண்டாம் உலகப் போரை அக்காலத்தில் மாணவராயிருந்த நாம் மறக்க முடியாது. எங்கெங்கெல்லாமோ. கிழங்கு, மா, இலை குழை என்றெல்லாம் தின்றார்களாம். இந்தப் பொல்லாத அனுபவம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விடுதியில் வாழ்ந்த எங்களுக்கு ஏற்படவில்லை. தம்பெரும் தண்ணளியாலும் தளரா உள்ளத்தாலும்தாய் போல் எம்மை ஊட்டி வளர்த்த ஆசிரியப் பெருந்தகையை அவருடைய பல்லாயிரக்கணக்கான மாணவர் என்றும் மறக்கமாட்டார்கள்

வகுப்பறைகளில் தமிழையும் வீமன் வீரத்தையும் கலந்து வழங்கி வளர்த்தவர் எல்லோராலும் அன்புடனும் மதிப்புடனும் 'KSS' என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஒரு தனி ஸ்தாபனமாக விளங்கி நின்று அமரத்துவம் அடைந்த K. S. சுப்பிரமணியம் அவர்கள். மைக்கல் ஆங்சலோ ரோமாபுரியின் புனித பீற்றர் ஆலயத்தின் சிற்பி - KSS யாழ்ப்பாணம் இந்து உருவாக்கிய மனித சமுதாயத்தின் சிற்பி.

சரியெனத் தான் கண்டதை யார் எதிர்த்தபோதும் செய்து முடிக்கும் ஒருவித 'விடாக் கண்டர்' KSS. ஒழுங்கும் கண்டிப்பும் அவருடைய விடுதி ஆட்சியில் நிலைத்து நின்றன.

சுமார் நாற்பது ஆண்டு காலம் உள்ளத்திடமுடன் கல்லூரி வளத்துக்கு தொண்டாற்றியதை நினைத்து வியக்கும்போது அதிபர் குமாரசுவாமி, ஆசிரியர்கள் நாகலிங்கம், சங்கரப்பிள்ளை, குலசிங்கம், C. சபாரத்தினம் போன்ற பெரியோர் நினைவுக்கு வருகின்றனர்.

KSS போன்ற தியாகச் செம்மல்களே எங்கள் கலைக் கோயில் இன்றைய புகழ் நிலை அடைய உழைத்த பெரியார்கள்.

1939ம் ஆண்டு சிவராத்தியன்று யான் சமய தீட்சை பெற்றேன். அறிவு வளர்ச்சிக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தியவர் அதிபர் KSS. அன்று தொடக்கம் கொழும்பு வைத்திய கல்லூரி விடுதியில் புகும்வரை நித்திய அனுட்டானங்களில் நான் தவறியதில்லை என்னைட்போல பலரை பராமரித்து தன்னைப் போல் நிமிர்ந்த நடையும் நேர்மையான உள்ளம்படைத்த மனிதராக மலர வைத்தவர் எங்கள் நன்றிக்குரிய பேராசான் KSS.

அவருடைய மறைவால் வாடும் வாழ்க்கைத் துணைவி, 'பின்தூங்கி முன்னெழும் பேதை' திருமதி சுப்பிரமணியத்துக்கும் எங்கள் அனுதாபம் உரித்தாகுக. அவருடைய மக்கட் செல்வங்கள் தந்தை போல் வாழவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

— டாக்டர் ப. சிவசோதி

---

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

[சுழிபுரம்]

சுழிபுரம் பறுளை ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

சுமார் பத்து லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள இச்சித்திரத் தேர் வேலைகள் யாவும் பூர்த்தியாகும் நிலைமையிலுள்ளது. திருநெல்வேலி சிற்பாச்சாரியார் திரு. ஆ. சீவரத்தினம் தலைமையில் வேலைகள் நடைபெற்றுவருகின்றன தேர் பாதுகாப்பதற்கான மண்டபமும் கட்டும் வேலைகளும் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-00
கமலஹாசன்-ஜெயபிரதா
மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின்
மிகச்சிறந்த படம்

லிடோ சினிமா
சுதாகர் - ராதிகா
நடித்த
ஆயிரம் வாசல்
இதயம்
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
பாக்கியராஜ் - சரிதா
நடித்த
மௌன கீதங்கள்
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி

மொடேர்ண்
மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சக லேன்
ராஜா தியேட்டருக்கு
அருகாமையில்)
13-5-85 முதல்
Dracula
ரகுலா
சிறந்த நடிப்பும், பாலி
யல் காட்சியும் நிறைந்
தது.
மிகக் கண்டிப்பாக
வயது வந்தவர்களுக்கு
மட்டும்.
ஆசனங்களுக்கு முந்
துங்கள்.

ஹரன் சினிமா
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல்
காட்டியவித்த வெற்றிச்
சித்திரம்
மோகன் - பூர்ணிமா
விதி
(கலர்)

வின்ஸர்
தினசரி 10-30, 2-00
4-15
Roger moore Ian Henry
in
VENDETTA FOR THE
SAINT
ஜேம்ஸ் பொண்ட் சித்திரம்

யாழ். வின்ஸர் மினி
தினசரி: 10-30. 2-30
ரஜனிகாந், ஸ்ரீப்ரியா,
சுந்தரராஜன், நாகேஷ்,
சுருளிராஜன்
நடித்த
தாய் மீது சத்தியம்
(தேவர் பிலிம்ஸ்)

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
மு. ப 10-30 பி. ப. 2-00
எம். ஜி ஆர் — பானுமதி
P. S. வீரப்பா
நடித்த
"மலைக்கள்வன்"

4-30 P. M.
I Spit on Your
Grave
(கண்டிப்பாக வயது
வந்தவர்கட்கு மட்டும்)

# நூல் நிலைய வளர்ச்சிக்கு உழைத்தவர்"

[யாழ்ப்பாணம்]

"உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் நூல் நிலைய வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருந்தவர் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி காந்திமதி ராஜகோபால அவர் ஓய்வு பெற்ற காலத்திலும் சமுதாயத்துக்கும் நல்ல சேவையாற்றுவார் என்று எதிர்பாக்கின்றேன்"

உருப்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் பல வருடங்கள் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி காந்திமதி ராஜகோபாலுக்கு அளிக்கப்பட்ட சேவைநலன் பாராட்டு விழாவுக்கு தலைமை வகித்துப் பேசுகையில் வித்தியாலய அதிபர் திரு. வி. அரியநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உப அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் பேசுகையில் ஆசிரியத்தொழில் புண்ணியமான தொழில். புண்ணியமான இத்தொழிலைச் செய்யும் வாய்ப்புப் பெற்றவர்கள் அத்தொழிலுக்கே தம்மை அர்ப்பணிக்கவேண்டும் என்றார், மற்றும் பலர்பாராட்டுரை வழங்கினர். (மா)

## நூல் நிலையம் திறப்பு விழா

[சுழிபுரம்]

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தினர் அங்கே கலவிகற்கும் மாணவர்களினதும், கற்பிக்கும் ஆசிரியர்களினதும் நன்மை கருதி புதிதாக ஒரு நூல்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

மாறிவரும் விஞ்ஞான தொழில்நுட்ப சகாப்தத்தில் இவ்வாறான ஒரு நூல் நிலையத்தின் அவசியம்கருதி கல்லூரியின் இயக்குநர் திரு. ஜேர்ஜ் பிள்ளைநாயகம் இந்நூல்நிலையத்தை உருவாக்கியுள்ளார்.

இந்நூல்நிலையக் கட்டிடம் எதிர்வரும் 20ம் திகதி திங்கட்கிழமை காலை 9-30 மணியளவில் யாழ்ப்பாண மாவட்டத் தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் டி. ஜே. அம்பலவாணர் அவர்களால் திறந்துவைக்கப் படவுள்ளது.

## ஒரே...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மரணமானவர்கள் நெடுந்தீவைச் சேர்ந்த சாந்தலிங்கம் என்பவர் படுகாயமுற்று ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார். இவர் யாழ் தொழில் திணைக்கள ஊழியராவார். (மா)

றீகல் மினி
தினசரி 10-30 மட்டும்
HOLLOWEEN II
காட்சிக்கு காட்சி திகிலூட்டும் பயங்கர ரெகுலாப் படம்.

லதா மினி
(கோண்டாவில்)
காலை 10-30 மாலை 3-30
பாண்டியன்—இளவரசி
நளினி நடித்த
"மண்ணுக்கேற்ற
பொண்ணு"

ஸ்ரான்லி மினி
(சினிமா)
10-30, 2-15, 4-15
Mckennas
Gold
அதிபயங்கரச் சண்டை
குதிரை ஓட்டங்கள்
பாலியல காட்சிகள்
5'X5' திரையில்

ஆனந்தி
வீடியோ சினிமா
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
எம். ஜி ஆர். லதா
நம்பியார்
ராஜ ராஜன்
(கலர்)

## சடலங்கள் ஒப்படைப்பு

[வவனியா]

வவனியா ஆஸ்பத்திரி பிரேதச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் அநுராதபுர ரயில் நிலையத்தைச் சேர்ந்த 8 பேரின் சடலங்களும் இன்று உறவினர்கள் எடுத்துச்செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் கடந்த 14ம் திகதி இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து ரயில் நிலைய ஊழியர்கள் எட்டுப்பேர் உட்பட பலர் கொலைசெய்யப்பட்டது தெரிந்ததே.

ரயில் நிலைய ஊழியர்களின் சடலங்கள் நேற்றுமுன்தினம் மாலை வவனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தது. எட்டுச் சடலங்களின் உறவினர்கள் நேற்று வவனியா ஆஸ்பத்திரிக்கு வந்துசேர்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இன்று சனிக்கிழமை காலை சடலங்களைக் கொண்டு செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (மா)

## இலங்கைப்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

"இந்நிலையில் இலங்கையில் இடம்பெறும் அட்டூழியங்களையும், தமிழர் மீதான படுகொலைகளையும்தொடர்ந்து அனுமதிக்கமுடியாது.

இந்தியாவின் பாதுகாப்பை முன்னிட்டும் ஒலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையிலும் இந்திய அரசு இலங்கை மீது கடற்படை முற்றுகை யொன்றை நடத்தவேண்டும். இம் முற்றுகை சட்டப்படி நியாயமானதாகும். இதனை இந்திய மத்திய அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும்." [கி]

## தஞ்சம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவ முகாமொன்றில் தஞ்சம் புகுந்த தமிழ் அரசாங்க ஊழியர்கள்மீது நேற்று சடுதியாக உணர்ச்சிவசப்பட்ட இராணுவ கோப்ரல் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்றும் இச் சம்பவத்தில் ஆறு பேர் பலியாகி 20 பேர் படுகாயமடைந்தனர் என்றும் கோப்ரலின் திடீர்ச் செயலைக் கண்டு ஆத்திரமடைந்தஇராணுவ உயர் அதிகாரி ஒருவர், கோப்ரலைச் சுட்டுக் கொன்றதாகவும் ஏனைய தமிழ் அரச ஊழியர்கள் உடனடியாக வேறு இடத்துக்குப் பத்திரமாக இடமாற்றப்பட்டதாகவும் உத்தியோகபூர்வமாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

## சடலங்கள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஒப்படைக்கப்பட்டன.

ஆறு பஸ்களிலும், லொறி ஒன்றிலும், வான் ஒன்றிலும் நேற்றுமாலை சடலங்கள் தனித்தனி பெட்டிகளில் வைத்து புங்குடுதீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஆறு மாத பெண் குழந்தையின் சடலம் மட்டும் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

நேற்று மாலை வரை பெருந்திரளான மக்கள் சவச்சாலைப் பகுதியில் காணப்பட்டனர். பின்னர் இரு பஸ்களில் அவர்களும் சென்றனர்.

படகில் கண்டெடுக்கப்பட்ட பணம், நகை, கைக்கடிகாரம், மற்றும் பொருட்கள், சடலங்கள் அடையாளம் காணப்பட்ட பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. [க]

# இப்படியும் நடக்கிறது

அ எனும் எழுத்துக்குப் பின்னர் வருவது ஆ அன்றோ.

அது சரி; த எனும் எழுத்துக்குப் பின்னர் வருவது தாவன்றவா? வாறுவா?

வ எனும் எழுத்துத்தான் என்று அடித்துக் கூறுகிறார் தந்தியார். அதவது 'வதந்தி' யாரி!

நேற்று முன்தின வதந்தி: ஊர்காவற்றுறை காரைநகர்

நேற்றைய வதந்தி; அநுராதபுரம் வவனியா, நெடுந்தீவு. விசாரித்துப் பார்த்ததில் நேற்று இரவு வரை எல்லாமே பூஜ்யம் தான்.

'ஊடுருவி'

## உதவி ஆசிரியர் நியமனம்

[கொழும்பு]

கடந்த மாதம் 6-ந் திகதி பயிற்சியை முடித்து வெளியேறிய தமிழ உதவி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுவது ஜூன் முதலாந் திகதி வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழுச் செயலாளர் சட்டத்தரணி க. ஜெயக்குமார் தெரிவித்தார்.

## வேளாங்கண்ணி திருவிழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு அன்னை வேளாங்கண்ணி திருவிழா இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை மாலை நான்கு மணிக்கு திருப்பவனியும், நற்கருணைப்பவனியும், நாளை ஞாயிறு காலை திருவிழாப்பூசைப்பலியும், திருச்சுரூபப்பவனியும் நடைபெறும்.

ஓராண்டு நினைவஞ்சலி

திரு. K. ரட்னம்
(முன்னாள் புகையிரதநிலைய அதிபர், சுன்னாகம்)



தோற்றம்:
15-08-26

மறைவு:
30-05-84

அப்பா,

அன்னையை நாம் இழந்து தவிக்கையில்
அன்புத்தாயாக எமை அரவணைத்த — நீங்கள்
மறைந்து ஆண்டொன்று சென்றாலும்
மங்காது என்றும் உம் நினைவு எம் மனதில்.

பிள்ளைகள்.

"அமுதசுரபி",
நவாலி தெற்கு, மானிப்பாய். (3308)

31-ம் நாள் நினைவஞ்சலி!

திருமதி புகலட்சுமி கிருஷ்ணமூர்த்தி



மலர்வு:
29-10-1946

உதிர்வு:
18-4-1985

திதி: 18-5-1985

"ஒளி மறையும் வேளையிலே
உயிர் பிரிந்து போனதிலே
ஒளியிழந்தோம் வாழ்வினிலே
நினைவுகள் தான் எங்கள் துணையோ"
எங்களை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டனையே

உமது ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கும்
கணவன், மாமி, சகோதரர்கள், சகோதரி,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
சிறிய தாயாரும், பிள்ளைகளும்

67/5, தர்மலிங்கம் அவனியூ,
கொட்டடி, யாழ்ப்பாணம். (3309)

## வதந்திகள் பற்றி அரசு எச்சரிக்கை

[கொழும்பு]

மக்களை தூண்டிவிடும் நோக்குடன் நாட்டில் பல்வேறு பகுதிகளில் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக வதந்திகள் பரப்பப்பட்டுள்ளன என்றும் அந்த வதந்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதே சமயம் இவ்வாறான வதந்துகளினால தவறான வழிகளில் செல்லாது மக்களை அமைதியாக இருக்குமாறும் அரசாங்கம் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [ரா]

## 'மாக்பெட்' ஸ்தாபனத்தின் பொருட்கள் கொள்ளை

[வண்ணார்பண்ணை]

வடபகுதி அரச கூட்டுறவு நிறுவனங்களில் ஒன்றான மாக்பெட் கூட்டுறவு களஞ்சியத்திலிருந்து லட்சக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த பொருட்கள் நேற்று கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

ஒரு வானில் வந்த சுமார் பதினைந்து பேர் நேற்றுக் காலை பத்துமணியளவில்இப்பொருட் கடத்தலை நடத்தினர் இரண்டு லொறிகளில் பலவகையான பொருட்கள் ஏற்றிச்செல்லப்பட்டன.

## சுன்னாகம் பிரஜைகள் குழு கூடுகிறது

[வண்ணார்பண்ணை]

சுன்னாகம் பிரஜைகள் குழுவின் விசேட செயற்குழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை கூடவிருக்கிறது.

## சிற்றூழியர் பலி

(சுண்டுக்குளி)

யாழ். செயலகத்தில் சிற்றூழியயராக கடமையாற்றிய வந்த ஐயன் சின்னையா (வயது 28) என்பவர் நெடுந்தீவில் இருந்த குறிகாட்டுவானுக்கு சென்றுகொண்டிருந்த படகில் கத்தி வெட்டுக்கு இலக்காகி மரணமானார்.

## ஐ. சி. எம். ஏ. பரீட்சை எழுதும் மாணவர்களை மகஜரில் கையெழுத்திட அழைப்பு

[யாழ்ப்பாணம்]

இம்மாதம் 20-ம் திகதி முதல் 22-ம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ள ஐ. சி. எம். ஏ. பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பரீட்சை எடுக்கும் மாணவர்கள் போக்குவரத்து வசதியின்மை காரணமாக மேற்படி பரீட்சைக்கு தோற்ற முடியாதுள்ளது.

இப்பரீட்சைக்கு வடபகுதியிலிருந்து மாத்திரம் சுமார் 300 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இவர்கள் தற்போதய தமது நிலைமையை யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்துக்கு விளக்கிக் கூறிய போது இம்மாணவர்களின் தற்போதய நிலையையும் அவர்கள் பரீட்சைக்கு தோற்ற முடியாத தற்போதய நாட்டு நிலைமையையும் விளக்கி இதற்கு மாற்று வழி செய்து தருமாறும் கோரும் மகஜர் ஒன்றை தம்முடம் தந்தால் அதனை மேற்படி பரீட்சை நடத்தும் நிறுவனத்துக்கு அனுப்பி ஆவன செய்வதற்கு முயற்சி செய்வதாக அரச அதிபர் இம் மாணவர்களிடம் உறுதியளித்தார்.

இதற்கான மகஜர் ஒன்று மாணவர்களினால் தயாரிக்கப்பட்டு மாதம் 20-ம் திகதி தொடக்கம் 24-ம் திகதி வரை கண்டி வீதியிலுள்ள யாழ். உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைக்கப்படும். பரீட்சைக்கு தோற்ற முடியாது அவலப்படும் மாணவர்கள் அனைவரையும் இத்திகதிக்குள் வந்து மேற்படி மகஜரில் கையொப்பம் ஈடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா கனகரத்தினம்

செல்லப்பா கனகரத்தினம் [கோண்டாவில் மேற்கு, அனுராதபுரம், றெயில்வே றண்ணிங் ரெட்] அகால மரணமாகிவிட்டார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கலாதரன் [கனடா], சசிகலா, கௌசிகலா, கோணேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற செல்லப்பாவும் சின்னட்பிள்ளையின் இளைய மகனும், நடராசா [ஓய்வுபெற்ற தலைமையாசிரியர்], சண்முகம்பிள்ளை, ராசதுரை [சின்னக்கிளி], அன்னம்மா, பாக்கியம், புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், காலம்சென்ற அருளம்பலத்தின் அன்பு மருமகனுமாவார் ஈமக்கிரியைகள் 18 5-85 சனிக்கிழமை நண்பகல் 2 மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(3324) மனைவி, மக்கள், மைத்துனர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி மாகிறேற் இராசதுரை

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருமதி மாகிறேற் இராசதுரை காலமானார். இவர் இராசதுரையின் [பொலிஸ் பென்ஷனியா] அன்பு மனைவியும், காலஞ் சென்ற டாக்டர் ஜோன், செல்வராணி, அஞ்சலா (பெரும்பாக உத்தியோகத்தர், நல்லூர்). புவிராஜசிங்கம் [பிரான்ஸ்], டாக்டர் புஸ்பநாதன் (இலண்டன்), யோகநாதன் (பொலிஸ் உத்தியோகஸ்தர்) ஆகியோரின் அருமைத் தாயாரும், இந்திராணி, மரியநயகம் (பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் வத்தளை], ராஜேஸ்வரி, ஜெயசோதி[ இலண்டன்], செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் 18-ந் திகதி சனிக்கிழமை (இன்று) காலை 10 மணிக்கு அவர்களின் இல்லமான ''புளொசொம்ஸ்'' இல் இருந்து ஆனைக்கோட்டை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும். 3319

## மரண அறிவித்தல்

புகையிரத நிலைய அதிபர்

### திரு. சங்கரப்பிள்ளை செல்வராசா

காலஞ்சென்ற திரு. திருமதி M S சங்கரப்பிள்ளையின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற திரு. திருமதி N A. தம்பிராஜாவின் மருமகனுமான திரு. சங்கரப்பிள்ளை செல்வராசா அகால மரணமானார். இவர் மதவாச்சி புகையிரத நிலைய அதிபரும், பொன்மணியின் அன்புக் கணவரும், சாவித்திரி (ஆசிரியர் உடுவில் மகளீர் கல்லூரி), செல்வேந்திரன் (கனடா), நளாயினி, ரவீந்திரன், சுபத்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கராணி, Dr. சிங்கராஜா, அரியராஜா, அரியராணி (கனடா), நேசராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிறேஸ் தவமணி, காலஞ்சென்ற மனோரஞ்சிதமலர், சுந்தரராஜா (லைபீரியா), Dr சிங்கராஜா துரைராஜா, இரத்தினராஜா, அரியகுணராஜா, கிறிஸ்டபெல் கனகமணி, M. C. பிரான்சிஸ், Dr. அரியரட்னம் (கனடா), சகுந்தலா, விமலா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், R இரத்தினராஜாவின் (கணக்காளர் கொழும்பு) அருமை மாமனாரும், செல்வன் வேளின் சராச்செல்வனின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை சனிக்கிழமை (இன்று) காலை 7 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திரு. த இரத்தினராஜா
கிராம சேவையாளர்

3316

## "மனித நாகரிகம் வெட்கித் தலைகுனியும் சம்பவம்"

### அன்னையர் முன்னணி கவலை

(வண்ணார்பண்ணை)

''மனித நாகரீகம் வெட்கித் தலைகுனியத்தக்க மிருகத்தனமான நடவடிக்கைகள் உடனடியாகத் தடுக்கப்படவேண்டும் இம்மாதம் 15ம் திகதி நெடுந்தீவிலிருந்து படகில் வந்த பிரயாணிகளை நடுக்கடலில் பரிசோதனைஎன்றபெயரில்தடுத்து மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான செயல் குறித்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.'' என்று யாழ்ப்பாணம் அன்னையர் முன்னணி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

மேற்படி முன்னணி விடுத்துள்ள அவ்வறிக்கையில், ''ஒரு வயதுகூட நிரம்பாத பச்சைக் குழந்தை உட்பட பெண்களும் ஆண்களும் கோடரியால் வெட்டப்பட்டும், துவக்குமுனைக் கத்தியால்தாக்கப்பட்டும்கோரமாகக் கொலை செய்யப்பட்டது மனித நாகரீகம் வெட்கித்தலை குனியும் சம்பவமாகும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

''அரச படகில் பிரயாணம் செய்த எமது மக்கள் அவல நிலையில் கொடூரமாக கொலைவி செய்யப்பட்ட நிகழ்ச்சி எல்லா மக்கள் மனதிலும் துன்பத்தையும் துயரத்தையும் ஏற்படுத்தி விட்டது. ஒன்றுமறியாத அப்பாவி மக்கள் மீது இடம் பெற்ற இந்த வன்முறைகள் நாட்டில் மனிதாபிமான உணர்வுகள் அருகிவருவதையே எடுத்துக் காட்டுகின்றது'' என்று நெடுந்தீவு முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. நா. இலட்சுமணன் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

### வில்பத்து...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பயங்கரவாதிகள் இவ்வன விலங்குப் பூங்காப் பிரதேசத்தைவிட்டு வெளியேறியிருக்க முடியாதென பாதுகாப்பு வட்டாரங்களில் நம்பப்படுகிறது

முப்படையினருடன் பொது மக்களும் இத்தேடுதலில் ஒத்துழைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இப்பயங்கரவாதிகள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புவட்டாரங்களை ஆதாரம்காட்டி செய்தியொன்று வெளியிடப்பட்டுள்ளது. (கி)

### அநுராதபுரம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆரம்பமானது.

களவாடப்பட்ட பஸ் வண்டியொன்றில் பயங்கரவாதிகள் திடீரென இப்பஸ் நிலையத்தில் வந்திறங்கினர். இராணுவச் சீருடையுடன் காணப்பட்ட அவர்களிற் சிலர் கட்டைக் கால்சட்டைகளையும் அணிந்திருந்தனர்.

இப்பயங்கரவாதிகள் பஸ்ஸை விட்டு இறங்கிறதும் இவர்களின் தலைவர் போன்ற ஒருவர் ''டைகேர்ஸ் பயர்'' என்று உரக்கச் சத்தமிட்டுக் கட்டளையிட்டார். இதனைத் தொடர்ந்தேஅப்பயங்கரவாதிகள் சராமாரியாகப் பொது மக்களை நோக்கிச் சுடத் தொடங்கினர்'' என்றார்.

இப்பயங்கரவாதிகள் குழு தொடர்ந்து பஸ்வண்டியொன்றில் சென்று அநுராதபுரம் வீதியில் கொழும்பிலிருந்து வந்த மினிபஸ் வண்டியொன்றையும் குண்டு வீசித்தாக்கியுள்ளனர். இதில் எவரும் கொல்லப்படவில்லை. அவ்வாகனத்தின் பின் பகுதி சேதமடைந்ததுடன் பயணிகள் சிலர் காயமடைந்தனர் என்று கூறப்பட்டது. [கி]

### -எங்களைத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இருந்தன சிலர் அரைக்கால் சட்டையும் 'ரீ' சேட்டும், சிலர் முழுக்கால் சட்டையும் சாதாரண சேட்டும் அணிந்திருந்தார்கள், எமது படகுக்கு கிட்ட வந்ததும் படகை நிறுத்தும்படி கட்டளையிட்டனர். கட்டளைக்கிணங்க எமது படகு நிறுத்தப்பட்டது.''

#### இருவர் காவல் நின்றனர்

''அந்த நேரம் நான் எங்கள் படகின் முன் அறையில் பல பிரயாணிகளுடன் இருந்தேன், ஏனைய பிரயாணிகள் பின் அறையில் இருந்தார்கள். 'பிளாஸ்டிக்' படகு எமது படகை சுற்றி வந்து பின்பக்கமாக இணைத்துவிட்டு எங்கள் படகில் ஏறினார்கள். பிரயாணிகளை மேலே வரும்படி கூறினார்கள் பின் படகிலிருந்த எல்லா பிரயாணிகளையும்,முன் அறைக்குச் செல்லுமாறு உத்தரவிட்டனர். எல்லோரும் முன் அறைக்குப் போனோம். பிரயாணிகளிம் ஒவ்வொருவராக பெயர் ஊர் கேட்டார்கள். முன் அறையில் வாசலில் இருவர் காவல் நிற்க ஆண்களைச் சிறிதுநேர இடைவேளையின் பின்னர், பின்டக்க அறைக்கு ஒவ்வொருவராகச் செல்லுமாறு பணித்தார்கள். அதே நேரத்தில் முன்அறையிலிருந்த எல்லாப் பிரயாணிகளையும் அவர்கள் பெயர், ஊர்களை உரத்துக்கூறிக் குளறுமாறு உத்தரவிட்டனர். எல்லோரும் பெயர் ஊர்களை உரக்கக் கூறினோம்.

#### தலையில் அடித்தார்

''பின் அறைக்கும், முன் அறைக்கும் இடையில் என்ஜின் அறை இருப்பதால் பின் அறையில் நடப்பது, முன் அறையில் உள்ளவர்களுக்குத் தெரியாது. அந்நேரம் துவக்கு வெடிச்சத்தம் கேட்டது எனது முறை வந்தபோது முன் அறையிலிருந்து பின் அறைக்குச் சென்றேன். ஒருவர் குறுகிய கொட்டனால் என் தலையில் அடித்தார். மற்றொருவர் பிடியில்லாதகோடரியால் தலையில் வெட்டினார். நான் வீழ்ந்துவிட்டேன். நான் பின் அறைக்குச் செல்லும் போது அங்கு பலர் இரத்தக் காயங்களுடன் கிடந்தனர். பிளாஸ்டிக் படகில் வந்தவர்களில் ஒருவர் கூரியகத்தி போன்ற ஆயுதத்தினால் என் வாயைக் கிழித்தார் எனக்குத் தலையிலும், முகத்திலும், வாயிலும் காயம் ஏற்பட்டது. நான் ஒரு பலகைக்குக்கீழ் கிடந்தேன். மற்றப் பிரயாணிகள் ஒவ்வொருவராகக் காயங்களுடன் என்மீது வீழ்ந்தனர். பிரயாணிகள் குளறிய சத்தம் கேட்டது. சுமார் ஒரு மணி நேரம் பிரயாணிகள் தாக்கப்பட்டனர். இதன் பிறகு பிளாஸ்டிக் படகு புறப்பட்ட சத்தம் கேட்டது. நான் எழுந்து பார்த்தபோது பிரயாணிகள் இரத்தக் காயத்துடன் கிடந்தனர்.

''என்னைப் போல் சிலர் காயங்களுடன் எழுந்து கதைத்த குரல் கேட்டது. பிரயாணி ஒருவர் ஒரு சிகப்புப் சையை காட்டினார். கரையில் இருந்தவர்களை அதன் மூலம் கூப்பிட்டார் எங்கள் படகு கரையை அடைந்து கொண்டிருந்தது. குறிக்கட்டுவானில் இருந்தவர்கள் படகில் வந்து எமது படகை இழுத்துச் சென்றார்கள். படகில் வந்தவர்களில் பலர் இறந்து விட்டதாக அறிந்தேன்.

#### வேற்று மொழியில் கதைததனர்

பிளாஸ்டிக் படகில் வந்தவர்கள், பிரயாணிகளுடன் 'கொச்சைத் தமிழில்' கதைத்தார்கள் எமது படகின் பின் பக்கத்தில் பிளாஸ்டிக்படகை இணைத்தபோது அவர்கள் தங்களுக்குள் சிங்களத்தில் கதைத்தார்கள்.

மரண விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the Genera Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P.O. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126